# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.326/2025

Deposition of  LW1 Examined as PW1 Dt. 16.06.2026

| | |
|---|---|
| Name | பாலாஜி |
| Father's Name | செல்வம் |
| Village | மொளப்பாக்கம் மெயின் ரோடு |
| Age | 22/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.06.26.

**(A1, A2 called absent)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய இருச்சக்கர வாகனமான Spender Plus TN51 AB 2551 பதிவு எண் கொண்ட வாகனத்தில் எனது வீட்டிலிருந்து காலை 8.00 புறப்பட்டு ஹவுசிங் போர்டில் உள்ள எனது நண்பர் வீட்டிற்கு சென்று எனது வாகனத்தை நிறுத்தி விட்டு எனது நண்பன் வாகனத்தில் நானும் அவனும் மூங்கில் தோட்டம் சென்றோம். திரும்ப 9.00 மணியளவில் வந்து பார்க்கும் பொழுது நிறுத்தி இருந்த இடத்தில் எனது வாகனம் காணவில்லை. தேடிப்பார்த்தோம் வாகனம் கிடைக்கவில்லை. பிறகு மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் நான் எழுதியதுதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் காட்டப்படும் கையெழுத்து என்னுடையதுதான். (**அது. அ.த.சா.ஆ 1 ஆகும்.**)பிறகு 3 நாட்கள் கழித்து எனது வண்டி கிடைத்தாக போலிசார் தகவல் கொடுத்தன் பேரில் நான் அடையாளம் காட்டி நீதிமன்றம் மூலம் மனு செய்து வண்டியை பெற்றுக் கொண்டேன். **(அது .அ.த.சா.ஆ 2 ஆகும்.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியை எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எனது வண்டியை யார் திருடினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது வண்டியை பெற்றுக் கொண்டேனா என்றால் பெற்றுக் கொண்டேன்.

S. Balaji

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவ்வாறே சரியானதென்று ஏற்கப்பட்டது.

16.6.26

நீதித்துறை நடுவர் எண் I

மயிலாடுதுறை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.326/2025

Deposition of LW2 Examined as PW2 Dt. 16.06.2026

| | |
|---|---|
| Name | ஹரிகிருஷ்ணன் |
| Father's Name | செல்வராஜ் |
| Village | மொளப்பாக்கம் |
| Age | 44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.06.26.

**(A1, A2 called absent)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சுமார் ஒரு ஆண்டுகளுக்கு முன்பு எனது நண்பர் பாலாஜியின் இருச்சக்கர வாகனம் காணவில்லை என்று போன் மூலம் எனக்கு தகவல் கொடுத்தார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

கடந்த 22.09.2024 அன்று காலை 9.00 மணியளவில் நானும் எனது தம்பி தியாகராஜனும் எங்கள் தெருவில் உள்ள ஹவுசிங் போர்ட் யூனிட் அருகில் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பாலாஜி பதட்டமாக வந்து தனது இருச்சக்கர வாகனம் காணவில்லை என்று சொன்னதன் பேரில் நாங்களும் அவருடன் சேர்ந்து தேடினோம். மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக பாலாஜி மயிலாடுதுறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் எங்களை விசாரித்த போது மேற்கண்ட சங்கதிகளை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரி பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

16.6.26

நீதித்துறை நடுவர் எண் I,
மயிலாடுதுறை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.326/2025

Deposition of LW5 Examined as PW3 Dt. 16.06.2026

| | |
|---|---|
| Name | சந்திரசேகரன் |
| Father's Name | மகாலிங்கம் ச |
| Village | மூங்கில் தோட்டம் |
| Age | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.06.26.

**(A1, A2 called absent)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **(அது அ.த.சா.ஆ3 ஆகும்.** )மயிலாடுதுறை போலிசார் அங்கு வந்து வண்டி காணாமல் போனது சம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நானும் எனது தம்பி விஜயகுமார் என்பவரும் கையெழுத்து போட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் கையொப்பம் வாங்கிய பேப்பரில் என்னது எழுதியது என்று எனக்கு தெரியாது. போலிசார் படித்துக் காட்டவில்லை. சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் மற்றும் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

16.6.26

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை.